# பகுதி IV(அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண சபை

**1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் (1) ஆம் இலக்க பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் பிரதான அமைச்சரும் நிதி, நீதி, சமாதானம், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி அமைச்சருமாகிய வீரசூரிய திசாநாயக்க முதியன்சேலாகே புஞ்சிபண்டா திசாநாயக்க ஆகிய நான், மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச் சட்டம் 1991.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறையிலிருக்க வேண்டும் என இத்தால் உத்தரவு பிறப்பிக்கின்றேன்.

டப்ளிவ். டீ. எம். பி. பீ. திசாநாயக்க,<br>
பிரதான அமைச்சரும், நிதி, நீதி,<br>
சமாதானம், பிரதேச நிருவாகம்,<br>
திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி<br>
அமைச்சரும் — மத்திய மாகாண சபை.

கண்டி,<br>
1994.02.03.

**1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

**1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நியதிச் சட்டம்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இந் நியதிச் சட்டம் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மத்திய மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

2. 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் விரிவுப் பெயரானது, அதிற் காணப்படும், அத்துடன் " திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம் " என்னும் சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம், திருத்தப்பட்டவாறான உற்பத்திவரிக் கட்டளைச் சட்டம், திருத்தப்பட்டவாறான மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், திருத்தப்பட்டவாறான நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம். "

ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

02—347/1

---

### மத்திய மாகாண சபை

**1993 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் முத்திரைத் தீர்வை மாற்றுவதற்கான நியதிச் சட்டம்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 1 ஆம் இலக்க பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் பிரதான அமைச்சரும், நிதி, நீதி, சமாதானம், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி அமைச்சருமாகிய வீரசூரிய திசாநாயக்க முதியன்சேலாகே புஞ்சி பண்டா திசாநாயக்க ஆகிய நான் மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் முத்திரை தீர்வையை மாற்றுவதற்கான நியதிச் சட்டம் 1991.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறையில் இருக்க வேண்டும் என இத்தால் உத்தரவு பிறப்பிக்கின்றேன்.

டப்ளிவ். டீ. எம். பி. பீ. திசாநாயக்க,<br>
பிரதான அமைச்சரும், நிதி, நீதி, சமாதானம்,<br>
பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி,<br>
உள்ளூராட்சி, கல்வி அமைச்சரும் — மத்திய<br>
மாகாண சபை.

கண்டி,
1994 பெப்புருவரி 3 ஆந் திகதி.

1993 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மத்திய மாகாண முத்திரைத் தீர்வை கைமாற்றுதல் நியதிச் சட்டம்

1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மத்திய மாகாண நிதி நியதிச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகளை மத்திய மாகாணத்திலுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஓர் நியதிச் சட்டம்

மத்திய மாகாண, மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

1. இந் நியதிச் சட்டம் 1993 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மத்திய மாகாண முத்திரைத் தீர்வை கைமாற்றுதல் நியதிச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

முத்திரைத் தீர்வைகளைக் கைமாற்றுதல்.

2. 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி நியதிச் சட்டத்தினதும் 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச் சட்டத்தினதும் நியதிகளின்படி, மத்திய மாகாணத்திலுள்ள ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளாக அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பிலான ஏதேனும் சாதனத்தின் மீது மாகாணசபை ஏதேனும் முத்திரைத் தீர்வையை அறவிட்டுச் சேகரித்து மத்திய மாகாணத்தின் மாகாண நிதியத்துக்குச் செலுத்தியுள்ளவிடத்து, மேற் சொல்லப்பட்டவாறான முத்திரைத் தீர்வையானது எந்த ஆண்டில் சேகரிக்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் நாளிலிருந்து 2 வருடகாலப்பகுதிக்குள்ளாக மத்திய மாகாணத்தின் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள் சபையின் அமைச்சருக்கு, அந்த உள்ளூர் அதிகார சபையின் பிரதான நிருவாக அலுவலரால் எழுத்தில் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின் மீது, எந்த அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பாக சொல்லப்பட்ட முத்திரைத் தீர்வை சேகரிக்கப்பட்டதோ அந்த அசைவற்ற ஆதனம் எந்த உள்ளூர் அதிகார சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ளதோ அந்த உள்ளூர் அதிகார சபைக்கு மாகாண சபையானது அம் முத்திரைத் தீர்வையின் தொகையைக் கைமாற்றலாம்.

பதிவாளர் தலைமை அதிபதியின் சான்றிதழ்.

3. இரண்டாம் பிரிவின் கீழான கோரிக்கை எதுவும், பதிவாளர் தலைமை அதிபதியினால் அல்லது அதன் சார்பில் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, அக்கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு பற்றிய அட்டவணையொன்றுடன் சேர்த்து அனுப்பப்பட்டாலொழிய செல்லுபடியுடையதாகாது.

பொருள் கோடல்.

4. இந் நியதிச் சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :—

" பிரதான நிறைவேற்று அலுவலர் " என்பது —

(அ) மாநகர சபையொன்று தொடர்பில், மாநகர் ஆணையாளர் எனவும் ; அத்துடன்

(ஆ) நகரசபை அல்லது பிரதேச சபை ஒன்று தொடர்பில் அதன் செயலாளர் எனவும் பொருள்படும்.

" உள்ளூர் அதிகார சபை " என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்று பொருளாவதோடு, ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்பட்ட, பிரியப்பட்ட அத்துடன் ஆற்றப்பட்ட தத்துவங்களை, கடமைகளை, அத்துடன் பணிகளை நேரொத்த அல்லது ஒத்தனவாயமைந்த தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அத்துடன் ஆற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்.

" சாதனம் " என்பது 1990 ஆம் ஆண்டின் 17 இலக்க மத்திய மாகாண நிதி நியதிச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

" மாகாண சபை " என்பது இலங்கைக் குடியரசின் மத்திய மாகாண, மாகாண சபை என்று பொருளாகும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

5. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.